Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 81/2025**

Preliminary Register

Deposition of **PW- 1 LW -1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மணிகண்டன் | Father Name | : | சண்முகம் |
| Village | : | பாதிரிபுரம் | Taluk | : | வலங்கைமான் |
| Age | : | 30 | Calling | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27th day of April 2026.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு.R.கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**<u>முதல் விசாரணை-</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். கடந்த 10.06.2025ம் தேதி மாலை 07.00 மணியளவில் எங்கள் ஊரில் உள்ள மகா காளியம்மன் கோவிலில் சாமி கும்பிட நானும் எனது மனைவி அபிநயா மற்றும் எனது கை குழந்தையுடன் சென்றோம். சாமி கும்பிட்டு கொண்டிருந்தபோது சீனு என்கிற ராஜேஸ் மற்றும் அவரது நண்பர் தினேஷ் மற்றும் சிலர் ஆகியோர்கள் எங்களை பார்த்து யாரும் சாமி கும்பிடக்கூடாது என்று கூறினர். ஊர் பெரியவர்கள் அவர்களிடம் இதுபோன்ற நடவடிக்கையில் ஈடுபடாதீர்கள் என்று கூறினார்கள், ஆனால் அவர்கள் அதை கேட்காமல் சண்டையில் ஈடுபட்டார்கள். அங்கு வந்த எனது சித்தப்பா மாரிமுத்துவை சீனு என்கிற ராஜேஸ் கையால் அடித்தார்.

பின்னர் அங்கிருந்தவர்கள் மறித்து விட்டார்கள் நாங்கள் சாமிகும்பிடாமல் எங்கள் வீட்டிற்கு நாங்கள் சென்றுவிட்டோம். மறுபடியும் இரவு 09.30 மணியிலிருந்து 10.00 மணியிருக்கும் நாங்கள் வீட்டிலிருந்தோம் எதிரிகள் மற்றும் எதிரிகளுடன் வந்த நபர்கள் அனைவரும் வாசலில் நின்ற என்னை அடிக்க ஆரம்பித்தார்கள். அதனை தடுக்க வந்த எனது சகோதரர் பாலமுருகனையும் அடிக்க ஆரம்பித்தார்கள். எனது சித்தப்பா மாரிமுத்துவை கம்பியால் 1ம் எதிரி சீனு என்ற ராஜேஸ் இடது பக்க கண்ணின் அருகில் அடித்து இரத்த காயத்தை ஏற்படுத்தினார். கீழே விழுந்தவரை சிமெண்ட் ரோடு என்றும் பாராமால் இழுத்து சென்றனர். எனது அக்கா கீதாவை பத்து நபர்கள் அடித்தார்கள் அவருக்கு கையில் காயம் ஏற்பட்டது. எனது சித்தப்பாவுக்கு அதிக இரத்தபோக்கு இருந்ததால் அவரை வலங்கைமான் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். முதலுதவி சிகிச்சை எடுத்தபிறகு எனது சித்தப்பாவுடன் வலங்கைமான் காவல் நிலையம் சென்று புகார்மனு கொடுத்துவிட்டு சித்தப்பாவிற்கு கண்ணில் அடிப்பட்டதால் அவரை அழைத்துக்கொண்டு கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சேர்த்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்தும் கையொப்பமும் என்னுடையதுதான். புகார் மனுவை நான்தான் எழுதினேன். புகார் மனு **அ.த.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. அனைத்து நபர்களும் மதுபோதையில் இருந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

சாட்சி கணேசன் எனது மாமா ஆவார். சாட்சி இரத்தினம் எனது பெரியப்பா ஆவார். அ.த.சா.ஆ1 புகார் மனு என்று கொடுக்கப்பட்டது என்பதற்கு தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் முதுநிலை பொறியாளர் படித்துள்ளேன். நான் கொடுத்துள்ள புகாரில் குறிப்பிட்டுள்ள மற்றும் சிலர் என்பதற்கு அவர்கள் குறித்த அடையாளமோ அவர்களது முகவரியோ பெயரோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரில் நான் குறிப்பிட்டுள்ள 'மற்றும் சிலர்' என்பவர்கள் அனைவரும் எனக்கு தெரிந்தவர்கள்தான் என்றால் சரிதான் கோவில் திருவிழாவின்போது பார்த்திருக்கிறேன் எதிரிகளின் உறவினர்கள். நாங்கள்

வலங்கைமான் மருத்துவமனையில் சிகிச்சை பெறும்போது மருத்துவரிடம் விபரங்கள் குறித்து கூறினோமா என்றால் கூறினோம், எழுதிக்கொண்டுதான் மருத்துவர்கள் சிகிச்சை அளித்தனர். கோவிலுக்கும் எனது வீட்டிற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் எனது வீட்டிற்கு பின்புறம் கோவில் உள்ளது சுற்றி சென்றால் சுமார் 150 அடி இருக்கும். கோவிலை சுற்றிலும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் முன்புறமும் எனது வீட்டிற்கு அருகில் நிறைய வீடுகள் உள்ளன என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சம்பவம் 09.30 முதல் 10.00 வரை நடந்ததாக கூறியுள்ள அச்சம்பவத்தை அருகில் உள்ளவர்கள் அனைவரும் பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். எனது குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. பேசிக்கொண்டுதான் இருந்தோம். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள, "நானும் எனது மனைவி அபிநயா மற்றும் எனது கை குழந்தையுடன் சென்றோம். சாமி கும்பிட்டு கொண்டிருந்தபோது சீனு என்கிற ராஜேஸ் மற்றும் அவரது நண்பர் தினேஷ் மற்றும் சிலர் ஆகியோர்கள் எங்களை பார்த்து யாரும் சாமி கும்பிடக்கூடாது என்று கூறினர். ஊர் பெரியவர்கள் அவர்களிடம் இதுபோன்ற நடவடிக்கையில் ஈடுபடாதீர்கள் என்று கூறினார்கள், ஆனால் அவர்கள் அதை கேட்காமல் சண்டையில் ஈடுபட்டார்கள். அங்கு வந்த எனது சித்தப்பா மாரிமுத்துவை சீனு என்கிற ராஜேஸ் கையால் அடித்தார். பின்னர் அங்கிருந்தவர்கள் மறித்து விட்டார்கள்". என்று புகாரிலோ அல்லது எனது வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள, "மறுபடியும் இரவு 09.30 மணியிலிருந்து 10.00 மணியிருக்கும் நாங்கள் வீட்டிலிருந்தோம் எதிரிகள் மற்றும் எதிரிகளுடன் வந்த நபர்கள் அனைவரும் வாசலில் நின்ற என்னை அடிக்க ஆரம்பித்தார்கள். அதனை தடுக்க வந்த எனது சகோதரர் பாலமுருகனையும் அடிக்க ஆரம்பித்தார்கள். எனது சித்தப்பா மாரிமுத்துவை கம்பியால் 1ம் எதிரி சீனு என்ற ராஜேஸ் இடது பக்க கண்ணின் அருகில் அடித்து இரத்த காயத்தை ஏற்படுத்தினார். கீழே விழுந்தவரை சிமெண்ட் ரோடு என்றும் பாராமால் இழுத்து சென்றனர். எனது அக்கா கீதாவை பத்து நபர்கள் அடித்தார்கள் அவருக்கு கையில் காயம் ஏற்பட்டது. எனது சித்தப்பாவுக்கு அதிக

இரத்தபோக்கு இருந்ததால் அவரை வலங்கைமான் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். " என்று புகாரிலோ போலீசார் விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரிதான் சில வார்த்தைகளை கூறாமால் விட்டுள்ளோம். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள, "முதலுதவி சிகிச்சை எடுத்தபிறகு எனது சித்தப்பாவுடன் வலங்கைமான் காவல் நிலையம் சென்று புகார்மனு கொடுத்துவிட்டு சித்தப்பாவிற்கு கண்ணில் அடிப்பட்டதால் அவரை அழைத்துக்கொண்டு கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சேர்த்தேன்" என்று புகாரிலோ போலீசார் விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போது எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகள் யாரும் என்னையோ எனது குடும்பத்தினரையோ தாக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் முன்விரோதம் காரணமாக எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.04.27 15:13:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 81/2025**

Preliminary Register

Deposition of **PW- 2 LW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மாரிமுத்து | Father Name | : | காளிமுத்து |
| Village | : | பாதிரிபுரம் | Taluk | : | வலங்கைமான் |
| Age | : | 57 | Calling | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27th day of April 2026.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு.R.கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அ.சா.1 எனது அண்ணன் மகன் ஆவார். சென்ற வருடம் வைகாசி மாதம் ஒரு ஞாயிற்று கிழமை பாதிரிபுரத்தில் உள்ள மகா காளியம்மன் கோவிலில் கும்பாபிசேகம் நடந்தது. கும்பாபிசேகம் முடிந்து 3 நாட்கள் கழித்து தாளாட்டு நடந்தது. சுமார் மாலை 07.30 மணியிருக்கும் 1ம் எதிரி சீனு என்ற ராஜேஸ் யாரை கேட்டு தாலாட்டு வைக்கிறீர்கள் என்று பிரச்சனை செய்தார். எனது அண்ணன் மகன் அசா.1 யிடம் பிரச்சனை செய்தார். நாங்கள் அனைவரும் வீட்டிற்கு

வந்துவிட்டோம். இரவு 09.00 மணியளவில் நான் பாதிரிபுரத்தில் இருந்த எனது வீட்டில் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது 10 நபர்கள் மற்றும் ஆஜர் எதிரிகள் அங்கு வந்து எங்கள் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த அ.சா.1ன் இருசக்கர வாகனத்தை உதைத்து கீழே தள்ளிவிட்டனர். ஏன் தள்ளினாய் என்று கேட்டதற்கு என்னை 1ம் எதிரி நகத்தால் இடது பக்க கண்ணத்தில் குத்திவிட்டார். இரத்தம் வந்தது நான் கீழே விழுந்துவிட்டேன். எனது அண்ணன் மகள் கீதா, மணிகண்டன் ஆகியோர்கள் வந்து மத்திசம் செய்தபோது அவர்களையும் அடித்துவிட்டார்கள். அசா.1 என்னை வலங்கைமான் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று முதலுதவி சிகிச்சை எடுத்தபிறகு அ.சா.1 என்னை அழைத்துக்கொண்டு கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

இவ்வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வலங்கைமான் அரசு மருத்துவமனையில் காயம் ஏற்பட்டது குறித்து கேட்டபோது யார் கூறினார்கள் என்றால் நான் கூறவில்லை அ.சா.1 தான் கூறினார். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் அ.சா.1 மணிகண்டன் சொல்லியதை கூறியுள்ளேன் என்றால் சரிதான். கோவில் கும்பாபிசேகத்தின்போது எங்களுக்கும் ஆஜர் எதிரிகளின் குடும்பத்திற்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்திற்கும் ஆஜர் எதிரிகளின் குடும்பத்திற்கும் இடையே கும்பாபிசேகம் நடத்துவது சம்பந்தமாக ஏற்கனவே விரோதம் ஏற்பட்டுவிட்டது என்றாலும் அதனை ஒப்புக்கொணடால் வழக்கில் பாதகம் ஏற்படும் என்பதற்காக அ.சா.1 சொல்லிக்கொடுத்து முன்விரோதம் இல்லை என்று

வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. நான் வேலை செய்யும்போது ஏற்பட்ட காயத்தை சாதகமாக பயன்படுத்தி எதிரிகளுக்கு எதிராக அ.சா.1 கொடுத்த பொய்புகாருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.04.27 15:13:50 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 81/2025**

Preliminary Register

Deposition of **PW- 3 LW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | இரத்தினம் | Father Name | : | காளிமுத்து |
| Village | : | பாதிரிபுரம் | Taluk | : | வலங்கைமான் |
| Age | : | 65 | Calling | : | கோவில் பூசாரி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27th day of April 2026.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு.R.கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து கோவில் பூசாரியாக தொழில் செய்து வருகிறேன். கடந்த 12.06.2025ம் தேதி இரவு 08.00 மணியளவில் போலீசார் சம்பவயிடத்திற்கு வந்து சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடமும் பார்வை மகசரும் தயார் செய்தார்கள். பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் கையொப்பம் செய்த காகிதத்தில் என்ன எழுதியிருந்தது எத்தனை பக்கம் எழுதியிருந்தது என்ற விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி

கையொப்பம் காவல் நிலையத்திற்கு வரவழைத்துதான் என்னிடம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.04.27 15:14:01 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.